Registered as a NewsPaper

# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ iv

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி - 05 | 20-06-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 122

N.I.T.M
Computer Training Center
Puthukkudiyiruppu
COMPUTER CLASSES
புதிய பிரிவு ஆரம்பம்
22.06.2003 பிற்பகல் 3.00 மணி
Ms Office 2000

## சிறிலங்காக் கடற்படைப் படகு மீன்பிடிப் படகை மோதி மூழ்கடித்தது

### முல்லைத்தீவு கடற்பரப்பில் சம்பவம்

**முல்லைத்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் சிறிலங்காக் கடற்படையினர் மீன் பிடிப்படகொன்றை மோதி மூழ்கடித்துள்ளனர். அதில் இருந்தவர் கடலில் குதித்தமையால் உயிர் தப்பியுள்ளார். இவர் நீண்ட நேரம் நீந்திக் கரைசேர்ந்தார்.**

முல்லைத்தீவு மணற்குடியிருப்பைச் சேர்ந்த பிலிப்பையா பாக்கியநாதன் (வயது-47) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையார் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே கடற்படையினர் இத்தாக்குதலை நடத்தியுள்ளனர். இச்சம்பவம் பற்றி அவரிடம் எமது செய்தியாளர் கேட்டபோது,

சம்பவதினமான நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு தொழிலுக்காக கடலுக்குச் சென்றதாகவும், இரவு 7.00 மணியளவில் செம்மலைக் கடலில் நான்கு பாகத்தில் நின்று வலையை இட்டதாகவும், அதன் போது சிறிலங்காக் கடற்படையின் ரோந்துப் படகின் சத்தம் கேட்டதாகவும், அவ்வேளை லைற்றினால் வெளிச்சத்தைப் பிடித்தவண்ணம் நின்றபோதும்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமம் பகுதியில் ஏ-9 வீதியில் இராணுவப் பாதுகாப்புடன் சோதனை!

(வடமராட்சி)

யாழ். கொடிகாமம் பகுதியில இன்று காலை யாழ். கண்டி வீதியை மறித்து படையினரின் கண்காணிப்பின் கீழ் பொலிசார் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

கொடிகாமம் நகரை அண்டிய பகுதியில் வீதிக்குக் குறுக்காக முட்கம்பித் தடைகள் போடப்பட்டு பொலிசார் குடாநாட்டுக்குள் பிரவேசிக்கும் வாகனங்களைச் சோதனையிடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, உழவு இயந்திரம் ஒன்றில் கொண்டு வந்து குவிக்கப்பட்ட இராணுவத்தினர் பொலிசாருக்கும் பாதுகாப்பாக அப்பகுதியில் கடமையாற்றினர்.

காலை எட்டு மணி முதல் ஆரம்பமான இச்சோதனை நடவடிக்கை பிற்பகல் இரண்டு மணி வரை நீடித்தது. இதேவேளை, அப்பகுதியில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகளுக்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## வீதி விபத்தில் வயோதிபர் காயம்

பளை நகர்ப்பகுதியில் ஏ-9 வீதியில் நேற்றுக் காலை 11.15 மணியளவில் வீதி விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் மோதி விபத்துக் குள்ளாகின. இதில் சங்கத்தார் வயலைச் சேர்ந்த முருகன் (வயது 60) என்பவர் கடுமையாகக் காயமடைந்த நிலையில், அப்பகுதியில் நின்ற மக்களால் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். (11)

## இடைக்கால நிர்வாக சபை குறித்து புலிகளுடன் பேச அரசாங்கம் தயார்

### சிறிலங்காப் பிரதமர் ரணில் தொலைக்காட்சியில் தெரிவிப்பு



இடைக்கால நிர்வாக சபை குறித்து புலிகளுடன் பேச அரசாங்கம் தயாராக உள்ளது என சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று தொலைக்காட்சி மூலம் ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை சமாதானத்தையும் அபிவிருத்தியையும் அடைவதற்கான சரியான பாதையை பின்பற்றுகின்றது என்றும் டோக்கியோவில் உதவி வழங்கும் மாநாட்டில் சர்வதேச சமூகம் அங்கீகாரத்தை அளித்திருக்கின்றது.

இந்த நம்பிக்கையை தக்கவைக்க கூட்டாக செயற்படுவது இன்றியமையாதது. உறுதியான சமாதான உடன்படிக்கை எய்தப்படுவதற்கு உகந்ததாக சர்வதேச சமூகம் நிதி வழங்கியது மிக முக்கியமானது.

டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் சமுகமளிக்காதது வருந்தத்தக்கதாகும். எனினும் தாம் யுத்தத்திற்கு திரும்பும் நோக்கமில்லை என்றும் பல தடவைகளில் தெளிவாகத் தெரிவித்துள்ளனர். அதேசமயம், விடுதலைப் புலிகள் பிரச்சினைக்கு சமாதானத்தின் மூலம் அரசியல் தீர்வு காண்பதில் தமது நம்பிக்கையையும், அர்ப் பணிப்பையும் வலியுறுத்தியிருக்கின்றார்கள். டோக்கியோ உதவி வழங்கும் மாநாடு நிரந்தரமானதும், நியாயமானதுமான அரசி

(iv ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான பேச்சு விபரம் நோர்வே ரணிலுக்குத் தெரிவிப்பு

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிறற்ஸ்கார் நேற்று சிறிலங்காப் பிரதமரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய நோர்வேத் தூதுவர் அந்தப் பேச்சுவார்த்தையின் விபரங்களை மேற்படி சந்திப்பின்போது பகிர்ந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக தனது நிலைப்பாட்டை சிறிலங்கா அரசு வெளியிட வேண்டும் என்று விடுதலைப்புலிகள் தெரிவித்த கருத்தை நோர்வேத் தூதுவர் ரணிலிடம் எடுத்துரைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளின் நல்லூர் கோட்ட

## அரசியல்துறைச் செயலகம் மீது நேற்றிரவு கைக்குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். நல்லூர் கோட்ட அரசியல் துறைச் செயலகம் மீது நேற்றிரவு 7.40 மணியளவில் கைக்குண்டொன்று வீசப்பட்டது. எனினும் அது வெடிக்கவில்லை என்பதால் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

அரசடி வீதிப் பக்கமாக இருந்து இலக்கத் தகடற்ற பெஷன் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இருவரே வைமன் வீதியிலுள்ள மேற்படி செயலகம் மீது குண்டை வீசிவிட்டுத் தப்பிச் சென்றனர். குண்டு அலுவலகத்தின் மக்கள் தொடர்பக பகுதியினுள் வீழ்ந்த பொழுது அங்கு மக்களும் போராளிகளும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு உடனடி

(iv ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி வளாகத்தில் படையினர் ஆயுதங்களுடன் நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் படையினர் ஆயுதங்களுடன் நடமாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக்கூடம் உட்பட 28,27,30 இலக்க விடுதிகளுக்குள்ளும் இவர்கள் நடமாடி வருகின்றனர்.

இதனால் நோயாளர்கள் பதற்றம் அடைவதுடன் அவர்களது மனநிலையும் மோசமாகப் பாதிப்படைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட போது அண்மையில் மருதனார்மடப் பகுதியில் இரு கைகளும் துண்டிக்கப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினருக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகவே இராணுவத்தினர் ஆயுதங்களுடன் நடமாடுவதாகத் தெரிவித்தனர்.

வைத்தியசாலை வளவினுள் சாதாரண புகைப்படக் கருவியைக் கொண்டு செல்வதற்கே தடைவிதிக்கப்படும் நிலையில் படையினர் ஆயுதங்களுடன் நடமாடுவது அனைவரையும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. (33)

## வீதி திருத்த வேலை காரணமாக போக்கு வரத்திற்குத் தடை

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் - பூனகரி வீதியில் பரந்தன் சந்தியில் இருந்து குமரபுரம் ஊடாக ஒவசியர் சந்தி வரையான வீதித் திருத்த வேலை காரணமாக போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இவ் வீதியூடாகப் பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வீதிக்குப் பதிலாக கிளி. கரடிப்போக்குச் சந்தியினூடாக பொறிக்கடவை ஒவசியர் கடைச் சந்தி வரையான பாதையை போக்குவரத்திற்குப் பயன்படுத்துமாறு தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (பா)



## தமிழீழ காவல்துறையின் புதிய அணி பயிற்சியை முடித்து வெளியேற்றம்

### வன்னி, தென் தமிழீழப் பணிமனைகளில் பணிபுரிவர்

தமிழீழ காவல்துறையின் புதிய அணி ஒன்று தமது பயிற்சியை நிறைவு செய்து கொண்டு நேற்று வெளியேறியது.

இப் புதிய அணியினரின் பயிற்சி நிறைவு நிகழ்வு வன்னிப் பெருநிலப் பரப்பிலுள்ள தமிழீழ காவல்துறையின் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழக் காவல்துறை நடுவப்பணியக மேற்பார்வையாளர் மாதவன் ஏற்றி வைக்க தமிழீழக் காவல்துறைக் கொடியினை பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர் தெய்வேந்திரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. புதிய அணியினரின் மரியாதை அணிவகுப்பை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு.பா.நடேசன் அவர்கள் ஏற்றுக்கொண்டார். இப்புதிய உறுப்பினர்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள காவல் பணிமனைகளிற்கும், தென் தமிழீழ காவல் பணிமனைகளிற்கும் பணிக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

# வெகுசன அமைப்புக்கள் பல்கலை மாணவர் இராணுவ அடாவடித்தனங்கள் குறித்துக் கண்டனம்

சிறிலங்கா அரசாங்கப் படைகளினதும் அரசினதும் புரிந்துணர்வு உடன்பாட்டிற்கெதிரான அடாவடித்தனங்களைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும், வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியமும் அறிக்கை வெளியிட்டுள்ளன.

இது குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

இயல்புவாழ்க்கை,அரசியல் உரிமைகள் என்பனவற்றில் தனக்குள்ள கடப்பாடுகளை உதாசீனம் செய்த அரசு இப்பொழுது ஒருபடி மேலே சென்று அழித்தொழிக்கும் வேலைகளையும் தீவிரமாக ஆரம்பித்திருக்கின்றது.

இதனையே சர்வதேச கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் எண்ணெய்க்கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டமையும், சுழிபுரத்தில் பொது மக்கள் தாக்கப்பட்டமையும் காட்டுகின்றன எனவும், 14 ஆம் திகதி எண்ணெய்க் கப்பல் சர்வதேசக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டதுடன், மாலுமிகளான12 விடுதலைப்புலிகள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இதனை சிறிலங்காக் கடற்படையினர் மறுத்துவரும் நிலையில் நிலைமைகள் மோசமான கட்டத்தை அடைந்து வருகின்றன. சமாதான முயற்சிகளில் முற்று முழுதாக நம்பிக்கையை இழக்க வைக்கின்றன.

இத்தகைய செயற்பாடுகளை படையினரும் சிறிலங்கா அரசும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

கடற்பரப்பில் நடந்தேறிய அனர்த்தம், மலர இருக்கும் சமாதானத்தை குழிதோண்டிப் புதைக்கும் கொடூரம் என்ற தலைப்பில் வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் எண்ணெய்க் கப்பல் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டதும், அதில் பயணம் செய்த 12 விடுதலைப்புலிகள் கைது செய்யப்பட்ட விடயம் முழு மக்களையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்த நடவடிக்கை பேச்சில் சமாதானம் செயற்பாட்டில் போரா? என்ற ஓர் உணர்வலையை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் மேலும் ஒரு பீதிநிலையை ஏற்படுத்தியுள்ளது. நிரந்தர சமாதானத்தை அடைவதற்காகப் போர் நிறுத்தப் பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, பேச்சுவார்த்தை மூலமே சமாதானம் அடையமுடியும் என்ற அடிப்படைக் கோட்பாட்டுக்கு அமைவாக விடுதலைப்புலிகள் இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தமது முயற்சிகளை முன்னெடுத்த வண்ணம் இருக்கும் இந்தவேளை, இவ்வாறான மூர்க்கத்தனமான செயலினை எமது ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இது போன்ற சம்பவங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

"மீண்டும் தமிழர்களை ஏமாற்றாதே" என்ற தலைப்பில் வவுனியா மாவட்ட பெண்கள் அமைப்புக்கள் விடுத்த அறிக்கையில், 1948ஆம் ஆண்டு அந்நிய ஆதிக்கத்திலிருந்து இலங்கை மீண்ட காலத்திலிருந்து சிங்கள இனவாத ஆட்சியாளர்கள் தமிழினத்தை அடக்கி ஒடுக்கி நசுக்குவதற்காகத் தீட்டிய திட்டங்களால்

இன்று நாம் நிலம் இழந்து, வீடிழந்து, உடைமைகள் இழந்து, உயிர்களை இழந்து, உறவுகளை இழந்து பத்தடி வாழ்விடத்தில் உழன்று கொண்டு இன்றைய சமாதான காலத்திலும் கூட சொந்த இடங்களுக்குப் போய் எங்களுடைய வீடுகளில் வாழமுடியாத அவலங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

தமிழர்களின் பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்பதற்கும் இழந்துபோன எம் மண்ணை மீட்பதற்கும் பண்பாட்டு விழுமியங்களைக் காப்பதற்குமாக தன்னிகரில்லாத் தலைவனின் 'கீழ் அணிதிரண்டனர்.

எமது சொந்த உணர்வுகளில் கைவைக்க முனைந்த தீய சக்திகளுக்கு நாம் ஒரு விடயத்தை உணர்த்த விரும்புகின்றோம். எம் இனத்தின் வீரம் நிறைந்த சுதந்திரமான வாழ்வு கிடைக்கும்வரை எமது உரிமைகளை, எமது தாயகத்தைப் பெறும் வரை தமிழினம் பொங்கிக் கொண்டே இருக்கும்.

இந்தச் சமாதானக் காலம் யாருக்காக? இந்தக் காலத்தில் நடக்க வேண்டிய யாவும் நடந்துவிட்டனவா? எமது பாடசாலைகளில் இன்னும் இராணுவம் எமது வீடுகளில், எமது வயல்களில், எமது கோவில்களில், மொத்தத்தில் எமது வாழ்விடங்களில் எல்லாம் இராணுவம் தனது நிலைகளைப் பலப்படுத்தியே வருகிறது. இவர்களுக்கு நாம் ஒன்றைக்கூறி வைக்கின்றோம். எமது வீரத்தின் பிரதிநிதிகளாகவே விடுதலைப்புலிகளைக்காண்கின்றோம். அந்த வீரத்தின் பலம் தான் இன்றைய புரிந்துணர்வு ஒப்பந்தம். எங்கள் பிரதிநிதிகளாகவே அவர்கள் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டதும் இன்று பேச்சுவார்த்தையை இடைநிறுத்தியதும் என்பதை யாவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சமாதான காலத்திலும் எம் வாழ்வு துயரம் நிறைந்தது. வறுமை நிறைந்தது. அழிவுகள் சூழ்ந்தது. மீண்டும் துயர வரலாறுகளையே வடிக்க முற்படும் தீயசக்திகள் நின்று நிதானித்துப் பார்க்கட்டும். கடந்த காலங்களில் நடந்த பேச்சுவார்த்தைகளின் மூலம் நாம் கற்ற பாடம் தான் இன்று எம்மைப் பலமடையச் செய்துள்ளது; கூர்மையடையச் செய்துள்ளது; நிதானமாகச் செயற்பட வைத்துள்ளது. இதனையே நாம் மீண்டும் மீண்டும் சிறிலங்கா அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாக உணர்த்தி வைக்க விரும்புகின்றோம்.

# வவு. வில் இரு கிராமங்களில் மீளக் குடியேற அனுமதி

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா' மாவட்ட அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட இரு கிராமங்கள் மக்கள் மீளக்குடியமர்விற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. வவுனியா ஓமந்தை, அரசமுறிப்பு ஆகிய இரு கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்விற்கு அனுமதி வழங்கப்பட்டதையடுத்து மேற்படிக் கிராமங்களைச் சேர்ந்த 125குடும்பங்கள் நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், வவுனியா பிரதேச செயலர் சத்திய சீலன், இராணுவ அதிகாரி கேணல் மொசாத் ஆகியோருடன் சேர்ந்து கிராமங்களுக்குச் சென்று மீள்குடியேற்றத்திற்கான ஆரம்ப வேலைகளைச் செய்துள்ளனர்.

ஓமந்தை பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், பிரதேச செயலர் சத்தியசீலன், இராணுவத் தளபதி கேணல் மொசாத், கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த எவ்.எஸ்.டி.ஜெயபாலன், தமிழர்புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர்.

இக்கிராம மக்கள் தற்காலிக கொட்டகைகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதோடு இராணுவ முன்னரங்கப் பகுதியில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் மேற்படி கிராமங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# பல்கலைக் கல்விக்கு புத்துயிர் ஊட்ட 400 கோடி ரூபா ஒதுக்கீடு

பல்கலைக்கழகக் கல்விக்கு புத்துயிர் ஊட்டுவதற்காக அரசு 400 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் புதிய திட்டத்தின் மூலம் அதனைப் புதிய திசையில் செலுத்தப்போவதாக மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்பயிற்சி அமைச்சு தெரிவித்துள்ளது.


## காணி விற்பனைக்குண்டு

ஜெயந்திநகர் பிரதான வீதியில் நல்ல நிலையில், வீடு (கூரை அற்றது) பாவனைக்குரிய மலசலகூடம், கட்டுக்கிணறு என்பவற்றுடன் 1/2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: திரு.இ.புவனேந்திரன்,
இல-133, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

(சி-8207)



## கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரும், கேள்விச் சபைத் தலைவரும் பின்வரும் கட்டட வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் எம் 7 (தரம் எம் 7) பதிவு செய்யப்பட்ட உள்ளூர் கட்டட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

(1) அரசாங்க அதிபரின் சுற்றுலா விடுதி மீள்புனரமைத்தல்.
(2) முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் பகுதி (1) கட்டடத்தினை மீள்புனரமைத்தல்.

மேற்கூறிய வேலைகளுக்கு கேள்வி கோருவோரிடமிருந்து மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000 உம், ரூபா 500 உம் மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 35,437/- உம், ரூபா 7,700/- உம் செலுத்தி, 27.06.2003 ஆம் திகதிக்கு முன் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் அதே தினத்திலோ அதற்கு முந்திய தினத்திலோ தலைவர், கேள்விச்சபை, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என்னும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியிலோ இடலாம்.

கேள்விகள் 30.06.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் கேள்வி கோருநரோ அல்லது அவருடைய பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட புனர்வாழ்வுக்கிளையுடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு.

(சி-8206)



## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள PANDIENI -4 COMPUTER ரசற் பிரின்டருடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: தங்க மாளிகை, ஈழநாதம் பணிமனை அருகாமை, யாழ்சாலை,கிளிநொச்சி. (3337)

### தவறிவிட்டது

அல்பிரட் புனிதராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், முக்கியமான ஆவணங்கள் அடங்கிய 5சிட்பேக் 18.06.2003 அன்று கிளிநொச்சியில் இருந்து வட்டக்கச்சிக்கு சைக்கிளில் செல்லும் போது தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (3339)

### காணி விற்பனைக்கு

74 ஸ்கந்தபுரம் கிளிநொச்சியில் 2 ஏக்கர் வீட்டுக் காணியும், 3 ஏக்கர் வயல் காணியும், கல் வீடுடைய கட்டுக் கிணறும், பயன்தரும் மரங்களுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள- சிரினிவாச, 31, தாவடி லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P.- 0212223523.

(சி-8175)

### விற்பனைக்கு

புதிதாக வாங்கி சிறிதுகாலம் பாவிக்கப்பட்ட கறுப்பு, வெள்ளை T.V., அன்ரனா, வயர், பற்றறி 90, பைப் உடன் விற்பனைக்கு. பார்வையிடுபவர்கள் மதியம் 1 மணிக்கு வரவும். மது மருந்தகம், முருகன் கோவிலடி, கிளிநொச்சி. (3338)


# அரச வைத்தியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க முடிவு

(கொழும்பு)

அரச வைத்தியர்களுக்கான சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்ய அமைச்சரவை நேற்று முன்தினமிரவு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் டாக்டர் தயாரட்ண தெரிவித்துள்ளார். பொருளாதார நெருக்கடி நிலவிய போதும் சம்பள உயர்வுக்கான மேலதிக நிதியை ஒதுக்குவதற்கு நிதியமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

# சிறிலங்கா வர்த்தகர்களுக்கு வரிவிலக்கு
## சட்ட மூலத்தில் திருத்தம்

(கொழும்பு)

சிறியளவிலான வர்த்தகர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்ட மூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள இருப்பதாக அமைச்சர் சொக்ஸி நேற்று முன்தினம் அமைச்சரவையில் கூறியுள்ளார்.

இதன் மூலம் "வற்வரி" அடங்கலாக மாதாந்தம் 75 ஆயிரம் ரூபாவிற்கு குறைந்த விற்பனை வருமானம் உள்ள வர்த்தகர்களுக்கு முழுமையான வரிவிலக்கு அளிக்கப்படும்.இது வாழ்க்கைச் செலவை குறைப்பதற்கு வழிசமைக்கும் என அரசின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

வற்வரியைச் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அமைச்சரவையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

# கல்வி அபிவிருத்தி மீளாய்வு செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி வலயங்களின் பாடசாலை அதிபர்களுக்கும் வலயக்கல்வி அலுவலர்களுக்குமான கல்வி அபிவிருத்தி மீளாய்வு செயலமர்வு ஒன்று நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வு இன்று துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையிலும், நாளை மறுதினம் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையிலும், 22ஆம் திகதி கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையிலும் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு காலை 8.30 மணி தொடக்கம் பகல் 1.30 மணிவரையும் நடைபெறும். தொடர்ந்து பிற்பகல் 2.00 தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் வலயக்கல்வி அலுவலர்களுக்கான செயலமர்வு நடைபெறவுள்ளது.

மேற்படி நடைபெறும் செயலமர்வில் வலயக்கல்விப் பணிமனையைச் சேர்ந்த பதவிநிலை உத்தியோகத்தர்கள், சேவைக்கால உத்தியோகத்தர்கள் 8 மணி முதல் 4 மணி வரையும் பங்குபற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (பா)

# கோட்ட மட்டத்திலான தமிழ்மொழிக்கலைத்திறன்போட்டி

கரைதுறைப் பற்று கோட்ட மட்டத்திலான தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டி இன்றும், நாளை மறுதினமும் முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதில் மாணவர்களின் அறிவாற்றலையும், கலைத்திறனையும் வெளிப்படுத்தும் போட்டி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இதில் 24 பாடசாலைகள் பங்கு கொள்ளவுள்ளதாகவும் இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக தண்ணீரூற்று சீ.சீ.பாடசாலை ஓய்வு பெற்ற அதிபர் திருமதி மல்லிகா பாலசிங்கம் கலந்து கொள்ளவுள்ளதாகவும் கரைதுறைப்பற்று கோட்டக் கல்வி அதிகாரி திரு.ஜி. எஸ். பரமேஸ்வரன் தெரிவித்தார்.(20)


## விழாக்காலச்சிறப்பு வாணிப உரிமம்

எதிர்வரும் 2003.06.23 ஆம் நாள் இடம்பெறவுள்ள புதூர் நாகதம்பிரான் ஆலயப் பொங்கல் நிகழ்வில் வாணிபம் நடத்தவுள்ளோர் 2003.06.19ஆம் நாள் தொடக்கம் ஆலய முன்றலில் செயற்படவுள்ள வருவாய்ப்பகுதிச் சிறப்புச் செயலகத்திலும், புளியங்குளம் வருவாய்ப்பகுதிச் செயலகத்திலும் விழாக்காலச் சிறப்பு வாணிப உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

வருவாய்ப்பகுதி,
நிதித்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

(3335)

-வடக்குக் கிழக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து-

# அரசு சமர்ப்பித்த சட்டமூலத்தின் சில பிரிவு அரசியல் சாசனத்திற்கு முரணானது

-உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

**வட-கிழக்கு உள்ளூராட்சி மன்றத்தேர்தல் தொடர்பாகத் தீர்க்கமான இணக்கப்பாடு எதுவும் காணப்படவில்லையெனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

வட-கிழக்கு மாவட்டங்களில் தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் உள்ளூராட்சித் தேர்தல் குறித்து நேற்று முன்தினம் விசேட பேச்சு வார்த்தையொன்று நடத்தப்பட்டுள்ளது.

தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் தத்தமது மாவட்டங்களுக்குச் சென்று ஆய்வொன்றை நடத்திய பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் குறித்துத் தீர்க்கமான தீர்மானம் எடுக் கப்படுமெனத் தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

இதேவேளை வட-கிழக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக அரசு முன்வைத்த விசேட சட்ட மூலத்தின் சில பிரிவுகள் அரசியல் சாசனத்திற்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

இதனால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும் பான்மையுடனேயே இச்சட்ட மூலத்தை நிறைவேற்ற முடியுமென உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளதாக சபாநாயகர் கூறியுள்ளார்.

# பிரிட்டனில் தஞ்சம் கோரும் இலங்கையர் 24 மணி நேரத்திற்குள் திருப்பி அனுப்பப்படுவர்

## பிரித்தானிய உள்துறை அமைச்சு அறிவிப்பு

(லண்டன்)

பிரித்தானியாவில் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்படுபவர் களின் பட்டியலில் இலங்கையும் இணைக் கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பு செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. இப்பட்டியலில் பிறேசில், ஈக்குவடோர், பொலிவியா, தென்னாபிரிக்கா உக்ரெய்ன் மற்றும் பங்களாதேஷ் ஆகியநாடுகளும் இணைக் கப்பட்டுள்ளன.

இதன்படி இலங்கை உட்பட அறிவிக்கப்பட்ட நாடுகளிலிருந்து அகதிளாகத் தஞ்சம் கோருவோர் 24 மணித்தியாலத்திற்குள் பிரித்தானியாவிலிருந்து வெளியேற்றப் படுவார்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட பிரித்தானியாவின் உள்துறை அமைச்சர் பிரித்தானிய அரசின் இப் புதிய திட்டத்தின் படி தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கையினை வருடத்திற்கு 20 ஆயிரமாக குறைக்க முடியும் எனக் கூறியுள்ளார்.

# சிறுவர் புனர்வாழ்வுத் திட்டம் குறித்து புலிகளுக்கு யுனிசெவ் பிரதிநிதி பாராட்டு

சமாதான முயற்சிகளில் பின்னடைவு ஏற்பட்டாலும் தமது படையணிகளில் இணைந்துள்ள சிறுவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களை முன்னெடுப்பதில் விடுதலைப் புலிகள் தீவிர ஆர்வம் காட்டிவருவதாக இலங்கைக்கான யுனிசெவ் வதிவிடப்பிரதிநிதி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கொழும்பில் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்; அரசாங்கத்துடனான சமாதான முயற்சிகளில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ள போதும், புலிகள் சிறுவர்களுக்கான புனர் வாழ்வுத் திட்டங்களைச் செயற் படுத்துவதில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் இந்தச் செயற் திட்டத்தில் புலிகளின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்து வருவதுடன் சிறப்பானதாகவும் அமைந்துள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கான செயற் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சமாதான முயற்சிகள் தடைப் பட்டாலும் கூட இந்தச் செயற்திட்டம் தொடரவேண்டும் என்பதில் விடுதலைபுலிகளும் அரசாங்கமும் யுனிசெவ்வும் இணக்கம் கண்டுள்ளன.

இந்தத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் புலிகள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். இதற்காக சிறுவர்களுக்கான இடைத்தங்கல் முகாங்களை அமைத்து புனர்வாழ்வு நடவடிக்கைகளை அவர்கள் வேகமாகச் செயற்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் சிறுவர்களைப் படைகளில் சேர்ப்பதான குற்றச் சாட்டுக்களும் இப்பொழுது வெகுவாகக் குறைந்துள்ளன.

சனவரி மாதத்தில் மட்டும் இத்தகைய 104 முறைப்பாடுகள் கிடைத்தன. ஆனால் மே மாதத்தில் 16 முறைப்பாடுகள் மட்டுமே கிடைத்துள்ளன என்று யுனிசெவ் வதிவிடப் பிரதிநிதி மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறி.இல் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு உலக வங்கி 1200 கோடி ரூபா கடன்

(கொழும்பு)

அரசின் வறுமை ஒழிப்புத்திட்டங்களுக்கு உதவி செய்வதற்காக உலகவங்கி 1200 கோடிரூபாவிற்கும் அதிகமான தொகையை வழங்கவுள் ளது.

உலக வங்கியின் வறுமை ஒழிப்பு ஒத்துழைப்பு கடன்திட்டத்தின் மூலம் எவ்வித நிபந்தனைகளுமின்றி இவ் உதவி வழங் கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கிளி.மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணி

(அலுவலக செய்தியாளர்)

வெண்புறா நிறுவனத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கிளிநொச்சி மாவீரர்துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாயன்று யுனிசெவ் வெண்புறா செயற்கை உறுப்பு நிறுவனத்தின் பத்தாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு சகல மாவட்டங்களிலும் உள்ள மேற்படி நிறுவனப் பணியாளர்கள் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணியினை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(பா)

# மத்திய கிழக்கு அமைதிக்கு புதிய அணுகுமுறை தேவை

## -சிரியா அறிவிப்பு

மத்திய கிழக்கில் அமைதியை நிலைநாட்டுவதற்குப் புதிய அணுகு முறையைக் கையாள வேண்டிய காலம் வந்துவிட்டதெனச் சிரியா கூறுகிறது.

முழுமையான பிராந்தியத்தையும் கருத்தில் கொண்டவாறு தீர்வுகள் அமைய வேண்டுமெனவும், அம் முயற்சியில் தானும் பங்கேற்க விரும்புவதாகவும் சிரியாவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

# சர்வதேசத்தின் அழுத்தம் ஈரான் மீது தேவை

## – புஷ் கருத்து

(வாஷிங்டன்)

ஈரான் அணு ஆயுத உற்பத்தியை மேற்கொள்வதை மேலும் பொறுத்துக் கொள்ள முடியாமையை சர்வதேச சமூகம் ஈரானுக்கு விளக்க வேண்டுமென புஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நேற்று முன்தின விவாதத்தின் பின்னர் அமெரிக்க சனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

ஈரான் அணுவாயுத உற்பத்தியை நிறுத்த சர்வதேசத்தின் அழுத்தம் தேவை என்றும் அவர் கூறியுள்ளார்.

## - கப்பல் மூழ்கடிப்பு விவகாரம் -

# ஆழமாக ஆராய்ந்த பின்பே முடிவிற்கு வரவேண்டியுள்ளது

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கப்பல் தாக்கப்பட்டமை தொடர்பாக குழப்பமான தகவல்கள் வெளியாகி வருவதால் அதனை ஆழமாக ஆராய்ந்தே அரசாங்கம் முடிவெடுக்க வேண்டியுள்ளதாக சிறிலங்கா பிரதமர் ரணில விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் அமைச்சர்கள் மத்தியில் கப்பல் தாக்குதல் சம்பவம் குறித்து பிரதமர் விளக்கம் அளிக்கும் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கப்பல்மீது தாங்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதில்லை என்று கடற்படையினர் தெரிவிக்கும் அதே சமயம் கடற்படையினர் கப்பலைத் தாக்கியதாக சனாதிபதி செயலக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் விடுதலைப் புலிகளும் தங்கள் தரப்பை நியாயப்படுத்தி அறிக்கை விடுத்திருப்பதாகவும் சிறிலங்கா பிரதமர் தெரிவித்துள்ளார்.

மூன்று விதமான தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் அரசாங்கம் உடனடி நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சம்பவம் குறித்து போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தொடர்ந்து ஆராய்ந்து வருவதாகவும் அதன் அறிக்கை கிடைத்த பின்னரே தமது அரசு எதனையும் கூற முடியும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# கிணற்றில் தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்

விசுவமடுப் புத்தடிப் பகுதியில் கடந்த செவ்வாயன்று குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து மரணமானார். சின்னையா லோகநாதன் (வயது 58) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே கிணற்றில் தவறி விழுந்து மரணமானார்.

இச் சம்பவம் தொடர்பாக இறந்தவரின் மகள் தெரிவிக்கையில், தனது தந்தை மதுபானம் அருந்துபவர் என்றும், சம்பவதினமும் மது அருந்திய நிலையில் இரவு படுத்தார். மறுநாள் அதிகாலை தாயார் 5.00 மணியளவில் தேநீர் கொண்டு சென்ற போது தந்தையைக் காணாததால் தேடிப்பார்த்துவிட்டு இறுதியில் கிணற்றடிக்குப் போய்ப்பார்த்து நீண்ட தடியை விட்டுத் தேடிய போது ஏதோ தட்டுப்பட்டதையடுத்து கூக்குரலிட அயலவர்கள் வந்து தேடியபோது தந்தையார் இறந்த நிலையில் கிடந்ததாகக் கூறினார்.

இது தொடர்பாக விசுவமடு காவல்துறையினர் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக புதுக்குடியிருப்புக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

(14)

# அமெரிக்க தூதரக அதிகாரி யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

## கலாச்சார நிலையம் திறப்பது குறித்து ஆராய்வு

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க தூதுவராலயத்தின் கலாச்சார உத்தியோகத்தர் போடிரெயிலர் யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா திலகநாயகத்தைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குடாநாட்டில் அமைக்கப்படவுள்ள அமெரிக்கதூதுவராலயத்தில் கலாச்சார அலுவலகம் ஒன்றை திறப்பது தொடர்பாகவும் அமெரிக்க தூதுவராலயத்தின் ஏற்பாட்டில் கலாச்சார நிகழ்வுகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் அவர் தனது பேச்சுக்களின் போது உரையாற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் இம்மாத நடுப்பகுதியில் கலாச்சார நிகழ்வுகளை நடத்த அவரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு யாழ் செயலக அதிகாரிகள் சாதகமான பதிலை வழங்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

(27)

# அபுதாபியில் 49 இலங்கையர் பொலிசாரால் கைது

(லண்டன்)

விசா முடிந்த நிலையில் அபுதாபியில் தங்கியிருந்த 41 இலங்கையர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 42 பேர் பெண்கள். இவர்கள் பணிப் பெண்களாக வீடுகளில் கடமையாற்றியவர்கள் எனக் கூறப்படுகிறது.

# சதாமின் முக்கிய தளபதிகளில் ஒருவர் அமெரிக்கப் படையினரால் கைது

## மிகப் பெரிய வெற்றியென அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாமின் நெருங்கிய தளபதிகளில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அமெரிக்கப் படைகளால் ஈராக்கில் தேடப்படுகின்ற முக்கிய நபர்களின் வரிசையில் 04ஆம் இடத்தை வகிக்கும் சதாமின் தளபதியும், சனாதிபதியின் செயலாளருமான அபிட்கமிட் முகட் என்பவரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சதாமின் ஆட்சியின் போது அவரை மிக நேசித்த ஒருவராகவும் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், சதாமின் சிரேஷ்ட மெய்ப் பாதுகாவலராகவும் விளங்கிய இவரது கைது தம்மைப் பொறுத்தவரை மிகப் பெரிய வெற்றியென அமெரிக் கக் கூட்டுப் படைகளின் மத்திய கட்டளையகம் தெரிவித்துள்ளது.

# சதாம் இன்னமும் ஈராக்கிலேயே தங்கியுள்ளார்

## பிரிட்டிஷ் பாதுகாப்பு செயலர் நம்பிக்கை

(லண்டன்)

அமெரிக்க, பிரிட்டன் கூட்டுப் படையினரால் பதவிகவிழ்க்கப்பட்ட ஈராக் சனாதிபதி இன்னமும் ஈராக்கிலேயே தங்கியுள்ளார் என நம்புவதாக பிரிட்டிஷ் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சதாமிற்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி திட்டவட்டமான கருத்துக்கள் எதுவும் இது வரை தெரிவிக்கப்படவில்லை. இதேவேளை கூட்டுப்படைகளால் ஈராக் மீது மேற்கொள்ளப்பட்ட அனைத்து தாக்குதல்களின் போதும் சதாமிற்கு பாதிப்பு எதுவும் ஏற்பட்டிருக்காது என நம்புவதாகக் கூட்டுப்படை தெரிவித்துள்ளது.

# பாராளுமன்றத்துள் சவப்பெட்டியுடன் நுழைந்து மரணச் சடங்கு நடத்திய எதிர்க்கட்சியினர்

## பாராளுமன்றம் 45 நிமிடங்கள் ஒத்திவைப்பு

சிறிலங்காப் பாராளுமன்றத்திற்குள் நேற்று சவப்பெட்டியுடன் பிரவேசித்த எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனைச் சபையின் நடுவில் வைத்து அதைச்சூழ இருந்து இறுதிச் சடங்கு நடத்தியுள்ளனர். மாகாண சபை உறுப்பினர் சுனில் மெண்டிஸ் கொலை செய்யப் பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து இவர்கள் நடத்திய இந்த மரண வீட்டால் சபை 45 நிமிட நேரம் ஒத்தி வைக்கப்பட்டது.

நேற்றுப் பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்ட போது கறுப்பு உடை அணிந்தவாறு சவப்பெட்டி போன்று வடிவமைக்கப்பட்ட பெட்டி ஒன்றை எடுத்து வந்து சபையின் நடுவே வைத்தனர். பின்னர் அதனைச் சூழ்ந்திருந்து இறுதிச் சடங்கை ஆரம்பித்தனர். பெட்டிக்குள் என்ன இருந்தது என்பது குறித்து தெரியவரவில்லை.

பொ.ஐ.முன்னணியையும் ஜே.வி.பி.யையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு மரணச்சடங்கை நடத்தினர். இவர்களில் பொ.ஐ.முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, ஜானக பண்டார தென்னக்கோன் ஆகியோர் முக்கியமானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து சபையில் இருந்து ஆளும் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர். இதனையடுத்து சபையை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

எதிர்க்கட்சியினரின் இச்செயலை அரசாங்கம் பெரிதும் கண்டித்துள்ளது. இந்த நடவடிக்கை அனைத்து பாராளுமன்ற உறுப்பினா களினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியது என்று பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ. ஜெ.எம். லொக்குபண்டார ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று மேற்கொள்ளப்படவிருந்த வரவு செலவுத் திட்டம் மீதான விசேட விவாதங்களைத் தடுக்கும் நோக்கில் இது மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இது மட்டுமன்றி நேற்று முன்தினம் மர்மப் பைகளை எடுத்து வந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றக் காவலர்களால் அவற்றைச் சோதிக்கும் நடவடிக்கைகளுடன் ஒத்துழைக்கவில்லை.

இவை பாராளுமன்றை சிக்கலுக்குள்ளாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டதாகவும், திட்டமிட்ட சதியெனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்படாமையையே இது காட்டுகிறது எனவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதற்கு முன்னரும் பாராளுமன்றத்திற்கு மலர் வளையங்கள் கொண்டு வந்ததாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, எனிமேல் தாம் எலும்புக் கூடுகளைக் கொண்டுவரவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இன்று சவப்பெட்டியை பாராளுமன்றத்திற்குள் கொண்டு வந்தது புதிய விடயம் அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

சனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்குடனேயே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஆனந்த சங்கரி நீக்கப்பட்டுள்ளார்

## நடவடிக்கைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான ஆனந்த சங்கரி நீக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைக்குழு கூட்டத்திலேயே இந்த அறிவிப்பு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தமிழ்த்தேசிய நடவடிக்கைக்குழுவில் அங்கம் வகித்த ஆனந்த சங்கரியை அந்தப் பொறுப்பில் இருந்து நீக்குவதாக கட்சியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் அறிவித்துள்ளதுடன் தாதுவருக்குப் பதிலாக ஜோசப்பரராஜசிங்கத்தை இப்பொறுப்புக்கு இணைத்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.

இதனை அடுத்து தற்போது எட்டுப் பேராக இருக்கும் நடவடிக்கைக் குழுவை பன்னிரெண்டாக அதிகரித்து ஒவ்வொரு கட்சியில் இருந்து மேலும் ஒவ்வொருவரை இணைத்துக் கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து மாவை சேனாதிராஜாவும், ரெலோவில் இருந்து சிவாஜிலிங்கமும், தமிழ் காங்கிரசில் இருந்து கஜேந்திரகுமாரும் புதிதாக இணைக்கப்பட்டுள்ளனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். தனது கட்சி உறுப்பினரை பின்னர் அறிவிப்பதாக தெரிவித்துள்ளது.

அதேவேளை, இனிமேல் யாரைச் சந்தித்தாலும் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இணைந்தே சந்திக்க வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தன்னை கூட்டமைப்புத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கியதாகக் கூறுவது தவறு என்றும் அவ்வாறு எவரும் தன்னை நீக்க முடியாது என்றும் சில காரணங்களுக்காக அன்றைய நடவடிக்கைக் குழுவுக்கு சமூகமளிக்கவில்லை என்றும் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

### சிறிலங்காக் கடற்...

கடற்படையினர் வள்ளத்தின் மேலால் செலுத்தினார்கள் எனவும் தெரிவித்தார்.

கடற்படைப் படகு நெருங்கிய போது அவர் உடனே கடலில் குதித்து நீந்தியதால் உயிர்தப்பினார். இரவு 7.30 மணிக்கு கடலில் குதித்த இவர் 11.30 மணிக்கே கரைசேர்ந்துள்ளார்.

வலையையாவது மீட்டு விடுவோம் எனத் தேடிச் சென்ற போது சிறிலங்காக் கடற்படை தொடர்ந்தும் அவ்விடத்திலேயே நின்றிருந்தது. இதனால், அதனைக்கூட மீட்க முடியவில்லை.

சிறிலங்காக் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்ட வள்ளம் புதிதாக கொள்வனவு செய்து மூன்று தடவைகளே தொழிலில் ஈடுபட்டிருந்தது. எனது நான்கு பிள்ளைகளையும் நன்றாக படிக்கவைக்க வேண்டும் என்பதற்காக கடன்பட்டே இந்த வள்ளத்தை வாங்கியிருந்தேன். எனினும் நான் இதில் உயிர் தப்பியதே பெரும் பாக்கியம் என அவர் மேலும் கூறினார்.

இருபந்தைந்து வருடங்களாக தொழிலில் ஈடுபட்டு வரும் நான் பல தடவைகள் இவ்வாறான சம்பவங்களைச் சந்தித்துள்ளேன். தற்போது மூன்று லட்சம் ரூபா சொத்தழிவு ஏற்பட்டிருக்கின்றது என அவர் கவலையுடன் கூறினார். (20)

### அரசியல்துறைச்...

யாகப் புலிகளால் அறிவிக்கப்பட்டபோது சம்பவ இடத்திற்கு வந்த அவர்கள் நிலைமையை நேரில் பார்த்ததோடு குண்டைச் செயலிழக்கச் செய்ய உடன் நடவடிக்கை எடுப்பதாகக் கூறிச் சென்றனர்.

### கொடிகாமம்...

கான பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பல்கலைக்கழக மாணவர்களது வாகனம் ஒன்றும் ஒலிபெருக்கியுடன் பொலிசாரால் சோதனைக்குள்ளாக்கப்பட்டது.

இதன்போது எவரும் கைது செய்யப்பட்டனரா? என்ற தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. (27)

### இடைக்கால...

யல் தீர்வு மூலம் மனித உரிமை, பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்டும் என்பன தொடர்பாக இலங்கை அதன் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஊக்கமளித்திருக்கின்றது.

சமாதான நடைமுறைகளில் ஏற்படும் முன்னேற்றத்தை தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக சர்வதேச சமூகம் தெரிவித்திருக்கின்றது. சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய பொறுப்பு விடுதலைப்புலிகளைச் சார்ந்திருக்கின்றது.

விடுதலைப்புலிகளின் இணக்கப்பாட்டுடன் இடைக்கால நிர்வாக சபையை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இது சகல சமூகத்தவர்களதும் உரிமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கும். இது தொடர்பாக சாத்தியமான தீர்வொன்றுக்கு விடுதலைப் புலிகளுடன் வருவதற்கு அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் உறுதியாக இருக்கின்றது.

புனரமைப்பு வேலைகளில் தாம் ஒதுக்கப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகள் கவலை கொண்டிருப்பதில் எந்தவித ஆதாரமும் இல்லை. வடக்கு-கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்தித் திட்டச் செயற்பாடுகளில் விடுதலைப்புலிகள் சம்பந்தப்படுத்தப்படுவார்கள். இது தொடர்பாக அவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

டோக்கியோ உதவி மேலும் இலங்கையை கடன் பளுவுக்கு இட்டுச் செல்லும் என்ற எதிர்க் கட்சிகளின் வாதங்களை நிராகரிக்கின்றேன். சலுகை அடிப்படையில் இந்தக் கடன்கள் வழங்கப்படுகின்றன. பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வது மிக முக்கியமானதாகும் என்று கூறினார்.



பொருண்மிய மதியுரையகத்தின் ஏற்பாட்டில் நேற்று வட்டக்கச்சியில் நடைபெற்ற சூழல் ஆய்வரங்கத்தில் எடுக்கப் பட்ட படம். (படம் லோகீசன்)

# வாக்களிப்பு முறையை மாற்ற அரசாங்கம் ஆலோசனை

சிறிலங்காவின் வாக்களிப்பு முறையை மாற்றி அமைக்க சிறிலங்கா அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது. தேர்தல் செலவினம், வன்முறை என்பனவற்றைக் குறைக்க விசேட கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் கருஜெய சூரிய தெரிவித்தார்.

இடைத்தேர்தல் மீண்டும் அறிமுகப்படுத்தப்படும். சனாதிபதித் தேர்தலும் பாராளுமன்றத் தேர்தலும் ஒரே நாளில் நடத்தப்படும். மாகாண சபைத் தேர்தலும், உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலும் ஒரே நாளில் நடத்தப்படும் என மேலும் தெரிவித்த அமைச்சர் இது தொடர்பாக அனைத்துக் கட்சிகளுடனும் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் இரு வாரங்கள் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# ஆசிரியரின் தாக்குதலால் மாணவனின் கை முறிந்தது

(யாழ்ப்பாணம்)

ஆசிரியரின் கடுமையான தாக்குதலுக்குள்ளான மாணவன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உரும்பிராயில் இயங்கிவரும் வசாவிளான் மகாவித்தியாலயத்தின் தரம் எட்டில் கல்வி கற்கும் மாணவனே இடது கை முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது.

உரிய நேரத்தில் மேற்படி வகுப் பில் கல்வி கற்பிக்க மேற்படி ஆசிரியர் தவறியதாகவும் இதனை அறிந்த பாடசாலை அதிபர், ஆசிரியரை கடுமையாக எச்சரித்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த ஆசியர் மாணவரைத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மாணவரின் பெற்றோர் பொலிசாரிடம் முறையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)

## வகுப்புக்கள்

பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிக் கலந்துரையாடல் வகுப்புக்கள் வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கிளி/மத்திய கல்லூரியில் நடைபெறும். சம்பந்தப்பட்டவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு சிரேஸ்ட விரிவுரையாளர் கி.சின்ன ராசா அறிவிக்கிறார்.

## சாவு அறிவித்தல்

### இலகுப்பிள்ளை செல்வநாதன் (செல்வம்)

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 81 கட்சன் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இலகுப்பிள்ளை செல்வநாதன் (செல்வம்) 17.06.2003 அன்று காலை காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்றவர்களான இலகுப்பிள்ளை நீலாம்பாள் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், ஐயாத்துரை உருக்குமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரசாத் (பிரான்ஸ்), பிரதீபா (வட்டக்கச்சி மகாவித்தியாலய உயர்தர மாணவி), பிரபோஸ் (வட்டக்கச்சி ம.வி.), பிரதீப் (வட்டக்கச்சி ம.வி), பிரமீரா (வட்டக்கச்சி ம.வி), பிரணவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி (ஜேர்மன்) காலம் சென்ற ஆசிரியை தனபாக்கியம், திலகவதி (வட்டக்கச்சி), காலம் சென்ற பூபதி, லக்ஷ்மணன் (லோகன் லண்டன்), யோகேஸ்வரி (வட்டக்கச்சி), யோகலெச்சுமி (வட்டக்கச்சி ஆசிரியர்), சுலோசனா (பிரேமா பிரான்ஸ்), ஜெகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசிங்கம் (ஜேர்மன்), தனபாலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர் சுவிஸ்), காலம் சென்ற சற்குணசிங்கம், அகிலா (லண்டன்), றங்கநாதன் (சின்னத்தம்பி வட்டக்கச்சி), விஸ்வநாதன் (சித்தப்பா நெல் கொள்வனவாளர்), குணரட்னம் (ஜேர்மன்), வாசுகி (லண்டன்), ஆகியோரின் அன்பு மைத்துனரும், முருகானந்தராசா (சுவிஸ்), பாலச்சந்திரன் (கொழும்பு), ராஜேஸ்வரி, ஜெயலக்சுமி, வசந்தமாலா, பத்மலீலா, கிருபாகரன் ஆகியோரின் மைத்துனரும் இந்திரவதனா (சுவிஸ்), சந்திரா, சிவனேஸ்வரன் (விஜி கட்டார்), நாகராசா, சந்திரன், றில்வான், அமுதகௌரி ஆகியோரின் அன்புச் சகலரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை 21.06.2003 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் மம்மில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்,**
**இல: 81, கட்சன் வீதி,**
**வட்டக்கச்சி.**

(2287)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு யூன் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.